**மாந்தை கிழக்கு பிரதேச சபை**

**முல்லைத்தீவு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 31 மார்ச் 2019 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 31 யூலை 2019 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 10 ஒக்டோபர் 2019 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுளள் விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து மாந்தைகிழக்கு பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போதும் இவற்றினை சமர்ப்பிக்கும் போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வருடாந்தம் நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கும்போதும் அவற்றினை சமர்ப்பிக்கும்போதும் பின்பற்றப்பட்டிருக்கின்ற பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைகள் உரியவாறு அங்கீகாரமளிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு சபையின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரால் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 7,290,725 பெறுமதியில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த பிக்கப், உழவு இயந்திரம் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் ரூபா 1,020,000 பெறுமதியில் வழங்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் என்பன சபைக்குரித்தற்றவையாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும் அவற்றின் பெறுமதிகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ளமையினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 8,310,725 ஆல் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது. | சபைக்கு உரித்தான வாகனங்கள் மாத்திரம் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | டபிள் கப் பிக்கப் வாகனமொன்று வங்கியில் லீசிங்கில் உள்ளதால் லீசிங் முடிந்த பின்னர் உரிமை மாற்றம் செய்யப்படும் என்பதால் அவ் வாகனப்பெறுமதி இறுதிக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த இரு உழவு இயந்திரங்கள் தொடர்பில் உரிமை மாற்ற விண்ணப்பங்கள் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிலும் நேர்முன்னைய ஆண்டுகளிலுமாக சபையின் நிலையான சொத்துப் பதிவேட்டில் 23 காணிகள் வெவ்வேறுபட்ட விஸ்தீரணங்களில் காட்டப்பட்டு அவற்றுள் கூட்டுமொத்தம் ரூபா 47,750 பெறுமதியில் 15 காணிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இக்காணிகளுக்குரிய உறுதிகள், நில அளவை வரைபடங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டுச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக சான்றுப்படுத்தமுடியாதிருந்தது. | சபைக்குரித்தான ஆதனங்களினை சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் மற்றும் காணி ஆணையாளர் நாயகம் ஆகியோரின் முறையான கருத்தொருமைப்பாடு மற்றும் அங்கீகாரத்திற்கமைவாக வரையறுத்து அவற்றின் காணி உறுதிகளைப் பெற்று நில அளவை வரைபடங்கள் மூலமான அத்தாட்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளர் அல்லது | 15 காணிகளில் 9 காணிகளுக்கு கடந்த கால போர்ச்சூழல் காரணமாக ஆவணங்கள் அழிவடைந்த நிலையில் காணிகளின் அனுமதிப்பத்திரம் இன்மையால் விலை மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. இவற்றுக்கான அனுமதிப்பத்திரம் கோரி மாந்தை கிழக்கு பிரதேச செயலாளருக்கு 08.10.2018 அன்று கடிதம் மூலம் அனுமதிப்பத்திரம் கோரியுள்ளோம். இது வரையில் |

| | | | |
|---|---|---|---|
| | | அரசவிலை மதிப்பீட்டாளரின் மூலம் அவற்றின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட சபையின் செயலாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரினால் காலதாமதமின்றி நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் விலை மதிப்பீட்டு திணைக்களம் மூலம் விலை மதிப்பிட்டு கணக்கறிக்கையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | சபைக்குரிய பொன்னகர் சந்தைக் கட்டடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாண்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் வரலாற்றுக்கிரயம், நிர்மாண வேலைகள் பற்றிய கோவைகள் என்பனவும் கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட விடயக்கோவையினை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு செயலாளரினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். மேலும் சந்தையின் ஆதனப் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும். | பொன்னகர் சந்தைக் கட்டடம் தொடர்பான பெறுமதி தவறுதலாக மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கு உட்படுத்தப்படவில்லை எதிர்வரும் ஆண்டு கணக்கறிக்கையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதிகள் | | | |
| (i) அத்தியாயம் III இன் பிரிவு 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்றினை மேற்கொள்வதற்குரிய | சோலை வரி மதிப்பீட்டினை மேற்கொண்டு | சோலை வரி தொடர்பாக எமது சபைக்குரிய |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சோலை வரியினைக் கணிப்பீடு செய்து வருடாந்தம் சோலை வரியினை ஒவ்வொரு காலாண்டிலும் சபையின் ஆளுகைக்குட்பட்ட ஆதனங்களிலிருந்து உரியவாறு அறவிடப்படுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பிரதேசத்தில் காணிகள் உறுதிக் காணிகள் இல்லை என்பதுடன் பிரதேசம் அபிவிருத்தியடையாத பின்தங்கிய பிரதேசமாக காணப்படுவதே காரணம் இருந்தும் சோலை வரி தொடர்பான கணிப்பீட்டிற்கு தொடர் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ii) அத்தியாயம் II இன் பிரிவு 66 | ரூபா 9,780,400 பெறுமதியான ஐந்து வகையான வருமான நிலுவைகளினை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் வருமான நிலுவைகளினை உரியவாறு அறவிட்டுக் கொள்வதற்கு சபையின் செயலாளரினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | சபைக்கு வருமான உத்தியோகத்தர் ஒருவர் இல்லாத நிலையிலும் அறவீடு மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| நிதிப்பிரமாணம் 571 | காலம் கடந்த 05 பிடிபண வைப்புக்கள் மற்றும் இரு மீளளிக்கத்தக்க கேள்விவைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காது 12 தொடக்கம் 16 மாதங்களாக ரூபா 235,466 பெறுமதியானவை வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | காலங்கடந்த நிலையிலுள்ள இத்தகைய வைப்புக்களினை உரியவாறு பரிசீலித்து மீளளிப்பதற்கு அன்றேல் சீர்செய்வதற்கு அன்றேல் முறையான அனுமதியுடன் உரியவாறு அரசிறைக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கைக்கமைய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி

| | | | |
|---|---|---|---|
| கைந்நூல் பிரிவு 3.4.3 | எழுதுகருவி வகை, மின்சார இனங்கள், மோட்டார் வாகனப் பழுது பார்த்தல்கள், பருவ இதழ்கள், வெளியீடுகள் போன்ற குறிப்பிட்ட வகுதிகளிலான பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு இயன்றவர்களாகவுள்ள வழங்குனர்களின் பெயர்களைக் கொண்டுள்ள நிரலொன்று சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்குநர்களின் பெயர்களைக் கொண்டுள்ள நிரல் ஒன்று வருடாந்தம் சபையினால் தயாரிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | மாகாண வழங்குனர் பட்டியலிற்கமைய மேற்படி கொள்வனவுகள் மேற்கொள்ளப்படுகிறது. இது 1987 ஆம் ஆண்டு பிரதேசசபை சட்டத்திற்கமைய சபையில் வெளியிடப்பட்ட 554/5 ஆம் இலக்க (1989.04.17) வர்த்தமானி அறிவித்தல் பிரிவு VII உபபிரிவு 3 இற்கமைய செய்யப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,371,183 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,583,474 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகைகள் | 779,000 | 823,045 | 449,118 | 305,442 | 599,000 | 710,975 | 362,966 | 348,009 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 141,000 | 434,634 | 434,634 | – | 324,000 | 142,845 | 142,845 | – |
| (iii) | ஏனைய வருமானம் | 8,712,500 | 14,717,862 | 5,311,389 | 9,474,958 | 7,377,000 | 9,975,365 | 7,388,007 | 2,587,358 |
| | **மொத்தம்** | **9,632,500** | **15,975,541** | **6,195,141** | **9,780,400** | **8,300,000** | **10,829,185** | **7,893,818** | **2,935,367** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது கடை வாடகை, குத்தகைக் கட்டணங்கள், சேவைக்கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் என்பவற்றினை உரியவாறு அறவிட்டுக்கொள்வதில் நலிவானநிலை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த கூட்டுமொத்த வருமானம் ரூபா 2.42 மில்லியனானது மீளாய்வாண்டிற்குரிய அத்தகைய வருமானங்கள் ரூபா 9.2 மில்லியனில் 26 சதவீதமாகவும் நேர்முன்னைய ஆண்டுகளிலுமாக அறவிடப்பட வேண்டியதான கூட்டுமொத்தம் ரூபா 12.12 மில்லியனில் 20 சதவீதமாகவும் இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள வருமான நிலுவைகளின் காலப் பகுப்பாய்வு கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | வருமான நிலுவைகளை உரியவாறு கணிப்பீடு செய்து வருடாந்தம் அவற்றினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் நிலுவையாயுள்ளவற்றின் காலப்பகுப்பாய்வினையும் வருடாந்தம் தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணம் கிடைக்காமையும் வருமான உத்தியோகத்தர் இல்லாமையாலும் வருமான நிலுவை அதிகரித்து காணப்படுகின்றது. |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1988 ஆம் ஆண்டில் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதிகள் அத்தியாயம் III இனது பிரிவு 32 இன் பிரகாரம் சபையினால் மீளாய்வாண்டிற்கான ஆதன வரி மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | ஆதனவரி மதிப்பீட்டு பதிவேடு பராமரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | எமது சபையில் வருமான பரிசோதகர் இன்மை அலுவலர்களில் பற்றாக்குறை என்பவற்றால் மீளாய்வாண்டிற்கான ஆதன வரி மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்படுகிறது. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 17 ஏப்ரல் 2009 ஆம் திகதிய 1597/8 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த தனியார் நிறுவனமொன்றின் 03 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள் மற்றும் மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்கள் முழுமையாக அறவீடு செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கட்டணங்களின் கூட்டுமொத்தப் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சகல தொலைத்தொடர்புக் கோபுரங்கள் தொடர்பிலான இத்தகைய நான்கு வகையான கட்டணங்களினையும் உரியவாறு வருடாந்தம் கணிப்பீடு செய்து அறவிட்டுக்கொண்டு சபையின் வருமானக் கணக்கிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க 1987ம் ஆண்டு 15 ம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 17.2 இன் பிரகாரம் தடையாக உள்ளது. இருந்தும் உரிய நிறுவனங்களுக்கு உரிய கட்டணத்தை செலுத்துமாறு எம்மால் கோரிக்கை விடுத்தும் அவர்களால் செலுத்தப்படவில்லை. |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,550,183 | சபைக்குரித்தான நீதிமன்ற தண்டப்பணங்களினை அவை உரித்தாக்கப்பட்டு ஒரு வருட காலத்தினுள் பிரதம செயலாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்வதற்கு | வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்தும் 2018.12.31 இல் உள்ளவாறான ரூபா |

| | | |
|---|---|---|
| தொகையான நீதிமன்ற தண்டப்பணம் பெறப்படவேண்டியிருந்தது. | ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 8,550,183 தொகைக்கான நீதிமன்ற தண்டப் பணம். உரியவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகாதார வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய அனைத்து வகையான செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமானது நேர்முன்னைய வருடத்தின் இறுதியில் தயாரிக்கப்பட்டு உரியவாறு அங்கீகரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019ம் ஆண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்படுகின்றதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நலிவடைந்திருந்தன. | திண்மக்கழிவுகளை அகற்றுதல் தொடர்பில் சபையினால் வினைத்திறன் மிக்க பொறிமுறை பின்பற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இத் திட்டத்தில் மேற்கொள்ள முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சபையினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளைப் போன்றே செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | 2030 ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள தேவையான பொருத்தமான குறிகாட்டிகள் உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையானது பாதீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளினை மேற்கொள்ளாது கூட்டுமொத்தம் ரூபா 23.2 மில்லியன் பெறுமதியான நிதியை கடந்த 04 ஆண்டுகளாக வங்கியொன்றின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலையான வைப்புக்களினைப் பயன்படுத்தி அல்லது அவற்றின் வருமானங்களிலிருந்து செயற்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பில் வருடாந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவற்றினை உரியவாறு திட்டமிட்டு முறையான அனுமதியின் பின்னர் செயற்படுத்தப்பட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | எமது சபையானது வருமானம் குறைந்த ஒரு சபையாக காணப்படுகின்றது இந் நிலையில் எமது சபையின் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நிதி தேவை என்பதால் வங்கியின் மூலம் கிடைக்கும் நிலையான வைப்புத் தொகைக்கான வட்டி பொரும் தொகை கிடைப்பதால் இத்தொகை எமது வருமானமாக 2018ம் ஆண்டுக்குரிய வருடாந்த வட்டி ரூபா 2,326,603 வருமானம் சேமிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபைக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 134 எண்ணிக்கையான தளபாட இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு | சபையினால் நன்கொடையாகப் பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டுவரும் சகல தளபாட மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதிகள் சபையின் | வெகுவிரைவில் பெறுமதி கணிப்பிடப்பட்டு உள்வாங்கப்படும் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அத்தகைய உபகரணங்கள் கிடைக்கப்பெற்ற திகதி, அவற்றின் பயன்படு பொருளாதார ஆயுட்காலம் என்பன கணக்காய்வுக்கு அறியக்கிடைத்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படுதல் வேண்டும். | |
| (இ) | மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 101.2 மில்லியன் பெறுமதியில் மதிப்பிடப்பட்டிருந்த 07 மூலதன வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராது முற்றாக கைவிடப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இதற்குரிய காரணங்கள் கணக்காய்வுக்குக் கிடைத்திருக்கவில்லை. | வருடாந்தப் பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட விடயங்களினை பயன்மிக்க வகையில் செயற்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | குறித்த ஆண்டில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறாமையால் இச் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**பதவி வெற்றிடங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொழில்நுட்ப உத்தியோகத்தர், வருமான பரிசோதகர் போன்றவற்றின் 50 சதவீதமான வெற்றிடங்கள் காணப்படுவதனால் முறையே அபிவிருத்தி வேலைச் செயற்திட்டங்கள் மற்றும் வருமான அறவீடுகளினை செவ்வனே செயற்படுத்த முடியாதுள்ளமை கணக்காய்வுக்கு அறியக் கொடுக்கப்பட்டிருந்தது. | சபையின் நாளாந்த கருமங்கள் மற்றும் செயல்நிறைவேற்றலுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரை பெற்றுக் கொடுப்பதற்கு உள்ளூராட்சி ஆணையாளர்/ பிரதம செயலாளரினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்படவில்லை. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரித்தான ஆதனங்கள், பொறித்தொகுதி இயந்திரங்கள் மற்றும் தளபாட உபகரணங்கள், கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றினை 28 யூன் 2017 ஆம் திகதிய நிதி மற்றும் வெகுசன ஊடக சொத்து முகாமைத்துவ அமைச்சின் 01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைவாக முறையே நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் பதிவேடு என்பவற்றில் பதிவுக்குட்படுத்தப்பட்டிருக்க நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கமைவாக நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கணனி உதிப்பாகங்கள் பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு நாளதுவரைப்படுத்தப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | 28 யூன் 2017ம் திகதிய நிதி மற்றும் வெகுசன ஊடக சொத்து முகாமைத்துவ அமைச்சின் 01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைவாக பதிவேடுகள் தற்போது பேணப்பட்டு வருவதுடன் காலாண்டுக்குரிய அறிக்கையும் தொடர்ச்சியாக அனுப்பி வைக்கப்படுகின்றது. |

**3.4.2 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினதும் நேர்முன்னைய ஆண்டினதும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகளுக்கமைவாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பின் தொடர் நடவடிக்கைகள் நாளதுவரை நலிவடைந்திருந்தன. | பின்தொடர் நடவடிக்கைகளினை அவ் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னராக மேற்கொண்டு முடிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும. | ஆய்வின் பின்னாராக தொடர் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்படுகிறது. |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையானது உடன் அடுத்துவரும் வருடத்திற்கான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பவற்றினை தயாரித்து அனுமதி பெறப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டு பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

**3.5.2 வழங்கல்கள் மற்றும் சேவைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகளினைப் பெற்றுக்கொள்ளுகின்றபோது பெறுகை வழிகாட்டல் பிரிவு 6.1.4, 6.2.1, 6.3.3, மற்றும் 7.11.1 இற்கமைவாக முறையே விலைக்கேள்வி ஆவணங்கள் பற்றிய பதிவேடுகள், அவை சமர்ப்பிக்கப்படுவதற்கான கால அவகாசம் குறிபபிடப்பட்டிருத்தல், கூறுவிலை திறத்தல் பற்றி வழங்குனர்களுக்கு அறியக்கொடுத்தல் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அறிக்கை பெறப்படுதல் போன்ற நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்காது மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 1,057,570 பெறுமதியான 10 வழங்கல்கள் சேவைகள் பெறப்பட்டிருந்தன. | பெறுகை வழிகாட்டிப்பிரிவு 6.1.4, 6.2.1, 6.3.3 மற்றும் 7.11.1 இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | நடைமுறைகள் தற்போது பின்பற்றப்படுகின்றன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் மீளாய்வாண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் சரியான பொறிமுறையினூடாக திட்டமிட்டு தயாரிக்கப்பட்டிருக்காமையால் ஆறு வகையான மதிப்பிடப்பட்ட செலவினம், உண்மைச்செலவினம் என்பவற்றிற்கிடையே 5 சதவீதம் தொடக்கம் 18 சதவீதம் வரையிலான வேறுபாடுகளும் ஐந்து வகையான மதிப்பிடப்பட்ட வருமானம் உண்மை வருமானம் என்பவற்றிற்கிடையே பாதகமானதும் சாதகமானதுமான வேறுபாடுகள் முறையே 13 சதவீதம் தொடக்கம் 349 சதவீதம் வரையிலும் ஏற்பட்டிருந்தன. | வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் உள்ள விடயங்களினை உரிய பொறிமுறையின் ஊடாக திட்டமிட்டு கணிப்பீடு செய்து நடைமுறைப்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எமது சபையானது பின் தங்கிய பிரதேசம் என்பதால் வருமான மூலங்கள் மிகமிக குறைவாகவே காணப்படுகிறது. இதனால் வருமான சேகரிப்பிலும் சிக்கல் நிலைமை காணப்படுகின்றது. கிடைக்கப்பெறும் வருமானத்திலேயே எமது செலவுகளும் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் பாதீட்டில் எதிர்பார்த்த இலக்க அடைய முடியாத நிலை காணப்படுகிறது. |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமென உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டுள்ள போதிலும் மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சிநிரல் மற்றும் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள் என்பன கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 134(2) இன் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஆளணி பற்றாக்குறை தொடர்திருப்பதால் தனித்து செயற்படமுடியாதுள்ளது. |